DEPOSITION OF WITNESS
( Chapter XXIII Code of Criminal Proceedure)
***
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE No.1 MADURANTAKAM

Calender : CC -101/2018
Miscellaneous :
Sessions : PW-1
Deposition of Witness for
**எதிரி ஆஜர்**

| | |
|---|---|
| Name | ரவி |
| Father's Name | |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 31/07/2023

**குறுக்கு விசாரணை**

**1.** ஆங்கிலம் சரளமாக எழுத படிக்க தெரியுமா என்றால் ஓரளவுக்கு தெரியும். நான் என்ன வியாபாரம் செய்கிறேன் என்றால் மர செக்கு எண்ணெய் வியாபாரம் மற்றும் நிதி நிறுவனம் நடத்தி வருகிறேன். எதிரி என்னிடம் எப்போது பணம் வாங்கினார் என்றால் 2017 ம் வருடம் டிசம்பர் மாதம் வாங்கினார் தேதி ஞாபகமில்லை. 2017 டிசம்பரில் பணம் கொடுத்ததாக எனது வழக்கறிஞர் அறிவிப்பிலும் புகாரிலும் பிரமாண வாக்குமூலத்திலும் சொல்லவில்லை என்றால் சரிதான். நான் பணத்தை வட்டிக்கு தான் கொடுத்தேன். வட்டிக்கு பணம் கொடுப்பதற்கு 1993 ல் நான் உரிமம் வாங்கியிருக்கிறேன். பணம் எப்போது கேட்டார் எவ்வளவு நாட்கள் கழித்து கொடுத்தேன் என்றால் பணம் கேட்ட 2 நாட்களுக்கு பிறகு பணம் கொடுத்தேன். பணம் கேட்ட பிறகு 2 நாட்கள் கழித்து பணம் கொடுத்த விவரத்தை எனது வழக்கறிஞர் அறிவிப்பில் சொல்லவில்லை என்றால் சரிதான். நான் சீட்டு நடத்தி வருகிறேனா என்றால் இல்லை. மோச்சேரியை சேர்ந்த பேட்டரி கடை வைத்துள்ள ராமுவை தெரியுமா என்றால் தெரியும். எதிரியை எனக்கு எப்படி தெரியும் என்றால் என்னுடைய காருக்கு பேட்டரி மாற்ற வந்தபோது அறிமுகமானார். பேட்டரி கடை ராமு மூலம் தான் எதிரியை எனக்கு தெரியும் என்றாலும் எதிரியும் ராமுவும் என்னிடம் 2016 ம் ஆண்டு சீட்டு போட்டிருந்தார்கள் என்றாலும் சரியல்ல.

2. எதிரி என்னிடம் 2017 ம் வருடம் ஒரு லட்ச ரூபாய் சீட்டு போட்டார் என்றால் இல்லை. நான் பணம் கொடுத்தற்கு ஆவணம் எழுதி வாங்கினேனா என்றால் இல்லை. ஒரு மாதத்திற்குள் பணத்தை திருப்பி கொடுக்கும் படி எதிரிக்கு பணத்தை கொடுத்தேன். 1 மாதத்தில் பணத்தை திருப்பி கொடுக்கவேண்டும் என்ற விவரத்தை எனது வழக்கறிஞர் அறிவிப்பிலும் புகாரிலும் சொல்லவில்லை. பொதுவாக வட்டிக்கு பணம் கொடுப்பவர்கள் ஒரு நோட்டு யார் யாருக்கு பணம் கொடுத்தோம் எந்த தேதியில் கொடுத்தோம் என்ற விவரத்தை எழுதி வைப்போம் என்றால் சரிதான். எதிரி எத்தனை மாதம் வட்டி கொடுத்தார் என்றால் வட்டி எதுவும் கொடுக்கவில்லை அசல் பணத்தை கொடுக்கும்போது வட்டி கொடுப்பதாக சொன்னார். எதிரிக்கு பணம் கொடுத்த விவரத்தை நான் நோட்டில் எழுதி வைத்திருக்கிறேனா என்றால் இல்லை. நான் எதிரிக்கு பணம் கொடுக்காததால் தான் நோட்டில் நான் எழுதி வைக்கவில்லை என்றால் சரியல்ல. 09-04-2018 ல்

எதிரி எனக்கு காசோலை கொடுத்தார்.

3. 10-04-2018 ல் காசோலையை பணமாக்குவதற்காக வங்கியில் போட்டேன். காசோலை கொடுக்கப்பட்ட வங்கி கணக்கில் பணம் இருக்கிறாதா என்று கேட்டு தெரிந்து கொண்டேனா என்றால் பணம் இருக்கிறதாக சொன்னார் எத்தனை மணிக்கு காசோலையை வாங்கினேன் என்றால் பகல் 12 மணிக்கு கொடுத்தார். காசோலையை எந்த இடத்தில் கொடுத்தார் என்றால் என்னுடைய அலுவலகத்தில் கொடுத்தார். காசோலையை மறுநாள் 1 மணிக்கு வங்கியில் போட்டேன். அன்றையதினமே காசோலை திரும்பியதற்கான குறிப்பாணையை கொடுத்துவிட்டார்கள். வழக்கு காசோலை தேதி கையொப்பம் தொகை ஆகியவை வேறு வேறு மையினால் நிரப்பப்பட்டுள்ளது என்றால் இல்லை. எதிரி சீட்டு கட்டும்போது பொறுப்பிற்காக கொடுத்த காசோலையை தவறாக பயன்படுத்தி எதிரி மீது தவறான வழக்கு தாக்கல் செய்திருக்கிறேனா என்றால் சரியல்ல. எதிரி எவ்வித தவறும் செய்யவில்லை என்றால் சரியல்ல.